www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

6

Register No. [ ]

# முதல் பருவத் தேர்வு – 2024

நேரம் : 2.00 மணி **தமிழ்** மதிப்பெண்கள் : 60

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **4x1=4**

1. சிட்டுக்குருவி வாழ முடியாத பகுதி .......
   அ) துருவப்பகுதி ஆ) இமயமலை இ) இந்தியா ஈ) தமிழ்நாடு
2. கணினி+தமிழ் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ....
   அ) கணினிதமிழ் ஆ) கணினித்தமிழ்
   இ) கணிணிதமிழ் ஈ) கனினிதமிழ்
3. தாய்மொழியில் படித்தால் ..... அடையலாம்.
   அ) பன்மை ஆ) மேன்மை இ) பொறுமை ஈ) சிறுமை
4. உடல் நோய்க்கு ......... தேவை
   அ) ஔடதம் ஆ) இனிப்பு இ) உணவு ஈ) உடை

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** **2x1=2**

5. 'சோபியா' ரோபோவுக்குக் குடியுரிமை வழங்கிய நாடு ....
6. இந்தியாவின் பறவை மனிதர் ......

**III. பொருத்துக.** **4x1=4**

7. முத்துச்சுடர் போல - மாடங்கள்
8. தூய நிறத்தில் - தென்றல்
9. சித்தம் மகிழ்ந்திட - பால்
10. இளமைக்கு - நிலாஒளி

**IV. கீழ்க்காணும் வினாக்களில் எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க** **5x2=10**

11. நீங்கள் தமிழை எதனோடு ஒப்பிடுவீர்கள்?
12. செந்தமிழின் புகழ் எங்கெல்லாம் பரவவேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?
13. தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
14. பறவைகள் எக்காரணங்களுக்காக இடம் பெயர்கின்றன?
15. சார்பெழுத்துகள் எத்தனை? அவை யாவை?
16. மனிதர்களுக்கு மருந்தாக விளங்குவது எது?
17. 'ரோபோ' என்னும் சொல் எவ்வாறு உருவானது?

**V. கீழ்க்காணும் வினாக்களில் எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க** **3x4=12**

18. எந்திர மனிதனின் பயன்களை விளக்குக.
19. சிட்டுக்குருவியின் வாழ்க்கை பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

20. இன்பத் தமிழ் - பாடலில் உங்களுக்குப் பிடித்த அடிகள் இரண்டனை எழுதுக.
21. தமிழ் மொழியின் சிறப்பைக் குறித்து ஐந்து வரிகளில் எழுதுக.
22. துருவப் பகுதிகளை ஆய்வு செய்ய எந்திர மனிதர்களை அனுப்புவதன் காரணம் யாது?

**VI. பின்வரும் பகுதியை அடிபிறழாமல் எழுதுக. 4+2=6**

23. "தமிழுக்கும்" எனத் தொடங்கும் இன்பத்தமிழ் பாடலை எழுதுக.
24. "இனிய உளவாக" எனத் துவங்கும் திருக்குறளை எழுதுக.

**VII. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க 7x2=14**

25. 'மை' என்னும் எழுத்தில் முடியும் சொற்களை எழுதுக.
26. கலைச்சொற்களை எழுதுக. 1. Facebook 2. Continent
27. பொருத்தமான சொற்களால் நிரப்புக
    1. பறவைகள் இடம்பெயர்தல் ........
    2. 'புள்' என்பதன் வேறு பெயர் .....
28. பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
    1. பரந்து விரிந்து இருப்பதால் கடலுக்குப் ............ என்று பெயர் (பறவை/பரவை)
    2. முத்து தம் ..... காரணமாக ஊருக்குச் சென்றார் (பனி/பணி)
29. கலைந்துள்ள எழுத்துகளை முறைப்படுத்துக.
    1. விகண்லம் 2. அவிறில்ய
30. அடிக்கோடிட்ட சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களை எழுதுக.
    1. கம்ப்யூட்டர் துறையில் உங்கள் அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்.
    2. இன்று பல்வேறு துறைகளில் ரோபோ பயன்பாட்டிற்கு வந்துள்ளது.
31. கீழ்க்காணும் சொற்களில் உள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக.
    1. கவிதை 2. பரிபாடல்

**VIII. கீழ்க்காணும் வினாக்களில் எவையேனும் ஒன்றனுக்கு விடையளிக்க 1x8=8**

32. விடுப்பு விண்ணப்பம்

(அல்லது)

'கிழவனும் கடலும்' என்னும் படக்கதையை உங்கள் சொந்த நடையில் கதையாக எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com